[25th April 1960

என்ஞலேயே நடவடிக்கை எடுக்க முடியும். அதிலும் குறிப்பாக இந்த வருடத்திற்குள்ளாக எல்லா தாலுகா தலைநகரங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு அதன்படி வேலை செய்து முன்னேறியும் இருக்கிறோம். அதில் கடைசியாக இருப்பதுதான் உடையார்பாளையம் தாலுகா. இதில் உடையார்பாளையம் பகுதி பூராவையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ளலாமா என்கின்ற பிரச்னை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. இதன் பேரில் ஒரு முடிவும் செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பற்றித் தனியாகக் கேள்வி போடுவதாக இருந்தால் மேல் உள்ள விவரங்கள் எல்லாம் சொல்லுகிறேன்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஸார், சாதாரணமாக மின்சாரம் செல்லும் வழியில் இருக்கின்ற அரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி கொடுக்கப்பட வேண்டும் என்பதை நாம் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாகச் சில இடங்களில், பஞ்சாயத்து போர்டு இருக்கக் கூடிய இடங்களில் அங்கு இருக்கக் கூடிய ஜாதி இந்துக்கள் வசதிக்குத் தக்க மின்சார வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அதே சமயத்தில் பக்கத்தில் இருக்கக் கூடிய அரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி கிடைப்பதில்லை. ஆகவே இப்படிப்பட்ட அரிஜன காலனிகளை எல்லாம் கணக்கெடுத்து, அவைகளுக்கு எல்லாம் மின்சார வசதி கிடைப்பதற்கு ஏதாவது அரசாங்கம் நல்ல முடிவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தப் பிரச்னையைப் பற்றி எனக்கு நன்ருகத் தெரியும். இந்தப் பிரச்னையைக்கூடிய மட்டும் உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்ற காரணத்திற்காக நான் இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்ட உடனேயே அரிஜன இலாகா அமைச்சர் அவர்களைக் கேட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்ஞல் எந்தக் கிராமங்களுக்கு எல்லாம் மின்சார வசதி விஸ்தரிப்பு நடைபெற்றிருக்கிறதோ, அந்தக் கிராமத்தின் சுற்றுப்புறத்திலுள்ள அரிஜன காலனிகளுக்கு மின்சாரம் போகாமல் இருந்தால் அவைகளுக்கு எல்லாம் மின்சார விஸ்தரிப்பு கொடுப்பதாக அரிஜன நல மானியத்திலிருந்து கொஞ்சம் உதவிகொடுத்தால், அந்தக் கிராமங்களுக்கு எல்லாம் மின்சாரம் கொடுத்துவிடலாம் என்று தீர்மானம் செய்தோம். இதற்காக அரிஜன மானியத்திலிருந்து 14 அல்லது 15 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று நிபுணர்கள் தெரிவித்தார்கள். இதை உடனடியாகத் தந்திருந்தால் இப்போது இந்தப் பிரச்னை வந்திருக்காது. ஆனுல், அரிஜன நல இலாகாவினர் கொஞ்சம் தீவிர கண்ணேட்டத்துடன் பார்க்காமல், இதைப் படிப்படியாகக் கொண்டு வரலாம் என்ற எண்ணத்துடன் வருடம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் ரூபாய் தந்து ஐந்து வருடத்திற்குள் முடிக்கலாம் என்று சொன்ஞர்கள். அதன்படி இப்போது எல்லா வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன. அதோடு எந்த இடத்திற்கு மின்சாரம் கொண்டுபோவதாக இருந்தாலும், சரி, பக்கத்தில் அரிஜனங்களின் காலனிகள் இருந்தால், அந்த ஸ்கீமில் அரிஜன காலனியையும் சேர்த்துக் கணக்கெடுத்தால்தான் விஸ்தரிப்பு நடக்கும், இல்லாவிட்டால் ஸ்கீம்கள் இருக்காது என்ற முறையில் கூட இருந்து வருகிறது. அதல்லாமல் அரிஜன காலனிகள் உட்படுத்தாமல் ஸ்கீம்கள் இருக்க வேண்டும் என்ருல் அதற்கு கலெக்டர் அவர்களிடத்தில் கேட்டு, ஸ்கீம் தாமதம்ஆகக் கூடாத நிலையில் அனுமதி கொடுத்து வருகிறோம். ஆனல் எங்கெல்லாம் அரிஜன காலனிகளுக்கு வசதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் வேகமாக மின்சார வசதி கொடுத்து வருகிறோம்.

Sales tax on bread and biscuits

* 807 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to remove the disparity in the rates of sales tax levied for bread and biscuits ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.